**செ. கு. எண்: 033** **நாள்: 26.02.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 26.2.2018

ஹரியானா மாநிலம், சண்டிகரிலுள்ள நேரு மருத்துவமனை கல்லூரியில், முதுநிலை ஆராய்ச்சி படிப்பு, முதலாம் ஆண்டு படிந்து வந்த மாணவரான, ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் குரூப், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. கிருஷ்ண பிரசாத் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர் திரு. கிருஷ்ண பிரசாத் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் செய்தி குறித்து அறிந்தவுடன், மாணவர் திரு. கிருஷ்ண பிரசாத் உடலை அவருடைய சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்யுமாறு அரசு உயர் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்த துயரச் சம்பவத்தில், உயிரிழந்த மாணவரின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாணவர் திரு. கிருஷ்ண பிரசாத் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**